1990 மே 3]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பேரூராட்சிகள் இல்லை, தமிழ்நாட்டில் 648 பேரூராட்சிகள் உள்ளன. அவைகளில் 560 பேரூராட்சிகளுக்கு சொந்த அலுவலகக் கட்டிடம் இருக்கின்றது. மிச்சம், எஞ்சியுள்ள 88 பேரூராட்சிகளுக்கு புதிய கட்டிடங்கள் இந்த ஆண்டு கட்டப்படும் என்று 24 ஆம் தேதி பதிலுரை அளிக்கிறபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் அலுவலகக் கட்டிடம் இருக்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த 88 கட்டிடங்களுக்கும் ஆகக்கூடிய மொத்த மதிப்பீடு எவ்வளவு? அது எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடித்துக் கொடுக்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இன்னும் பட்ஜெட்டிலே விளக்கங்கள் கேட்டு, இப்போதுதான் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. 24ஆம் தேதி தான் மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். விரைவாக அந்தப் பணி நடக்கும். இந்த ஆண்டுக்குள்ளாக முடிக்கப்படும்.

ஏடங்கணசாலை பேரூராட்சியை இரண்டாகப் பிரித்தல்

5322. **திரு. சு. பழனிசுவாமி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

> மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எடங்கணசாலை பேரூராட்சியில் இருபதாயிரம் மக்கள் தொகை உள்ளதால் இதை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> தற்பொழுது 1991ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக எவ்வித நிர்வாக மாற்றங்களையும் செய்யக்கூடாதென அரசால் தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடங்கணசாலை பேரூராட்சியில் சுமார் 25,000 மக்கள் தொகைக்கு மேல் இருக்கிறார்கள். அதோடு முப்பதுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருப்பதால் போதிய வருமானம் இல்லாத பேரூராட்சியாக இருக்கிறது. ஆகவே, அடிப்படை வசதிகள் கூட செய்து தரமுடியாத நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பேரூராட்சியைப் பிரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையாணை நீக்கப்பட்டதற்குப் பிறகு பரிதாபத்தோடு இது கவனிக்கப்படும்.

ஐ. ஆர். டி. பி. கடன்கள்

*5420. திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ. ஆர். டி. பி.-யில் கொடுக்கும் கடன்கள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் தொழில், பணி மற்றும் வணிகப் பிரிவின் கீழ் ஊரக பேரூராட்சிகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கும் உதவி அளிக்கப்படும்.

9-15 மணி.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம், ஜனத்தொகை அடிப்படையிலே அத்தகைய கடன்கள் வழங்கப்படுவதில் அதிகமான பேரூராட்சிகள் உள்ள ஒன்றியங்களுக்கு சிறப்பாக ஏதாவது அரசு அளிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: கிராமப் பஞ்சாயத்துக்கு எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறதோ, அந்த அடிப்படையில் பேரூராட்சிகளுக்கும் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS